**மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.**

**முன்னிலை: திரு.எஸ்.இராமச்சந்திரன். பி.எல்.,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**கோபிசெட்டிபாளையம்.**

**2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18-ம் நாள் வியாழக்கிழமை.**

**(திருவள்ளுவர் ஆண்டு 2057, பராபவ வருடம், ஆனி மாதம் 04-ம் நாள்)**

***குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண். 222/2025***

**CNR NO.TNED08-000566-2025**

| | | |
|---|---|---|
| எந்த நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து இந்தமேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது | : | நீதித்துறை நடுவர் எண்.1, கோபிசெட்டிபாளையம். |
| நீதிமன்ற வழக்கு எண் | | CC. No.40/2021 |
| மேல்முறையீட்டாளர் பெயரும் விபரமும் | : | திரு.செ.பிரவீன்,(வயது 24)<br>த/பெ. செல்வகுமார்,<br>க,எண்.6/53,முத்துக்குமரன் தெரு,<br>கும்மிக்கருக்கு,கொளப்பலூர்,<br>கோபிசெட்டிபாளையம் தாலூக்கா,<br>ஈரோடு மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளர் பெயர் | : | காவல் ஆய்வாளர்,<br>கோபிசெட்டிபாளையம் காவல் நிலைய<br>குஎண்.924/2020. |



S
RAMACHANDRAN

Digitally signed by
S
RAMACHANDRAN
Date: 2026.06.18
09:45:50 +0930

| | | |
|---|---|---|
| விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு | : | முடிவில், எதிரி இதச. 279, 304(A) ஆகிய பிரிவுகளின்கீழ் குற்றவாளி என தீர்மானித்து, இதச.279 பிரிவின் கீழ் தனியாக தண்டனை வேண்டாம் என்று முடிவு செய்தும், இதச.பிரிவு 304(A)பிரிவின்கீழான குற்றத்திற்கு, 3 மாதம் மெய்காவல் சிறைத் தண்டனையும், அபராதம் ரூ.2000/- விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத் தண்டனை விதித்தும் குவிமுச.பிரிவு 255(2)ன்கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி காவலில் இருந்த காலத்தை அவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்தை குவிமுச.பிரிவு 428 ன்கீழ் கழித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. |
| விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டதா மாற்றி அமைக்கப்பட்டதா. நீக்கறவு செய்யப்பட்டதா | : | முடிவில், இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்ற ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.40/2021, நாள் 26.08.2025 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தண்டனை ரத்து செய்து தீர்ப்பளிக்கப் -படுகிறது. எனவே, எதிரியின் மீது சுமத்தப்பட்ட இதச. 279, மற்றும் 304(A) ஆகிய பிரிவுகளின்கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமில்லாத |



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:45:59 +0930

| | | |
|---|---|---|
| | | வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி மேற்படி பிரிவுகளின்கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து குவிமுச.பிரிவு 386 ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| மேல்முறையீடு தாக்கலான நாள் | : | 16.09.2025 |
| மேல்முறையீடு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 23.09.2025 |
| மேல்முறையீடு இந்நீதிமன்றத்திற்கு வந்த நாள் | : | 29.09.2025 |
| மேல்முறையீடு இந்நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்ட நாள் | : | 06.10.2025 |
| மேல்முறையீடு வாதிட்ட நாள் | : | 16.06.2026 |
| மேல்முறையீடு தீர்ப்பு நாள் | : | 18.06.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு 16.06.2026-ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது, மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஜாகிர் உசேன் அவர்களும், எதிர்மேல் முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், வழக்காடியும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள், விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை மேல்முறையீட்டுக்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:46:07 +0930

காரணக் குறிப்பாணை ஆகியவற்றைப் பரிசீலனை செய்தும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**தீர்ப்புரை**

01. கோபிசெட்டிபாளையம் நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 40/2021 வழக்கில், 26.08.2025-ம் தேதியன்று வழங்கப்பட்ட தண்டனை மற்றும் தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்/எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளார்கள்.

02. கடந்த 16.09.2020-ம் தேதி காலை 10.20 மணிக்கு கோபிசெட்டிபாளையம் காவல் நிலைய சரகம், கோபி புதுக்கரைப்புதூர் கனரா வங்கி முன்பாக உள்ள கோபி - அத்தாணி ரோட்டில் சாட்சி.1 சசிக்குமாரின் உறவினர் நடராஜன் என்பவர் அவரது TN 36 K 6300 என்ற பதிவு எண் கொண்ட TVS XL Super வண்டியில் வடக்கிலிருந்து தெற்காக வந்து ரோட்டின் மேற்புறமுள்ள கனரா வங்கிக்கு செல்வதற்காக சைகை காட்டியபடி வலதுபுறமாக திரும்பிய போது, மேற்படி ரோட்டில் அவருக்கு பின்னால் அதே திசையில் TN 36 AE 4345 என்ற பதிவு எண் கொண்ட Honda Unicorn என்ற மோட்டார் சைக்கிளை வடக்கிலிருந்து தெற்காக



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:46:15 +0930

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், மனித உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படும் விதமாக இவ்வழக்கின் எதிரி ஓட்டி வந்து, மேற்படி நடராஜன் ஓட்டி திருப்பிச் சென்ற TVS XL Super வண்டியின் பின்புறமாக மோதி விபத்தை ஏற்படுத்தியதால், ரோட்டில் கீழே விழுந்த நடராஜனுக்கு இடது பக்க நெற்றி, வலது கணுக்கால் ஆகிய இடங்களில் பலத்த மொக்கை காயமும், இடது தோள்பட்டையில் சிராய்ப்புக்காயமும் ஏற்படுத்தியதாகவும், பின்னர் உடனடியாக மேற்படி காயம்பட்ட நடராஜன் கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து முதலுதவி சிகிச்சை பெற்று, பின் மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் 16.09.2020 ம் தேதி காலை 12.20 மணிக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட போது, 12.24 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளதாகவும், எனவே, எதிரி நடராஜன் என்பவருக்கு உயிரிழப்பு ஏற்படுத்தியதால், மேற்படி எதிரியின் செய்கையானது இ.த.ச.279, 304(A) சட்டப்பிரிவுகளின்படி தண்டிக்கக்கூடியவர் என கோபி காவல் நிலைய உதவி ஆயவாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

03. கோபிசெட்டிபாளையம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் வழக்கை கோப்புக்கு எடுத்துக் கொண்டு சட்டவிதிகளை பின்பற்றி வழக்கு



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:46:24 +0930

ஆவணங்களை குவிமுச.பிரிவு 207 ன்கீழ் இலவசமாக எதிரிக்கு அளித்து குற்றம் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால் அரசுதரப்பு சாட்சிகளை விசாரிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டது.

04. அரசுதரப்பில் அ.சா.1. முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரித்து அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியிடப்பட்டுள்ளது.

**05. விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

புகார்தார அ.சா.1 தனது சாட்சியத்தில், 16.09.2020 தேதியன்று காலை 10.00 மணியளவில் க்கு வீட்டில் இருந்து புறப்பட்டு தான் வேலை செய்யும் HDFC வங்கிக்கு தனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது, புதுக்கரைப்புதூர் என்ற இடத்தில் உள்ள கனரா வங்கிக்கு அருகே தனக்கு முன்பாக நடராஜ் என்பவர் TVS XL வண்டியில் ரோட்டை கடந்து செல்லும் போது, பிரவீன் என்பவர் அதே சாலையில் கோபி நோக்கி வந்தவர் நடராஜ் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், மேற்படி விபத்தினால் நடராஜ் என்பவருக்கு தலை மற்றும் வலது காலில் அடிபட்டுவிட்டதால், அவரை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அனுப்பி



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:46:32 +0930

வைத்ததாகவும், இது சம்பந்தமாக புகார் மனு அ.சா.ஆ.1 கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5-2 அ.சா.2 திரு.சேகர் தனது சாட்சியத்தில், சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது, தனது மாமா சம்பந்தி நடராஜ்க்கு தலை, மற்றும் காலில் அடிபட்டிருந்தாகவும், ஆங்காங்கே சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டிருந்தவரை கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், போலீசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அது அ.சா.ஆ.2 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5-3 அ.சா.3 திரு.லோகநாதன் தனது சாட்சியத்தில், தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், கடந்த 2020 ஆம் ஆண்டு காலை 10.45 மணிக்கு அந்தியூர் மெயின்ரோட்டில் டீ போட்டுவிட்டு வெளியே வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்ததாகவும், ஆம்புலன்ஸில் யாரையோ எடுத்துச் சென்றார்கள் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:46:40 +0930

5-4 அ.சா.4 திரு.பிரகாஷ் தனது சாட்சியத்தில், கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பாக புதுக்கரைப்புதூரில் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, காவல் நிலையத்திலிருந்து சி.சி.டி.வியை பார்க்க வந்து தன்னை விசாரித்த போது தான் விபத்து குறித்து தனக்கு தெரிய வந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5-5 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 திரு.சோமசுந்தரம் தனது சாட்சியத்தில், அ.சா.1 நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்துமூலமான புகாரை தலைமைக் காவலர் திரு.முனுசாமி பெற்று கோபிசெட்டிபாளையம் காவல் நிலைய குற்ற எண். 924/2020 இதச. 279, 304 (A) ஆகிய சட்டப்பிரிவுகளின்கீழ் பதிவு செய்த அ.சா.ஆ.,3 ஆன முதல் தகவல் அறிக்கையை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகேசன் என்பவர் பெற்றுக் கொண்டு, 16.09.2020 அன்று சம்பவ இடம் சென்று சாட்சிகள் சேகர், பாலசுப்பிரமணியம் முன்னிலையில் பார்வையிட்டு அ.சா.ஆ.4 ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வைத்திருந்த வழக்கை அ.சா.5 ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது முதல்கட்ட



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:46:48 +0930

விசாரணையில் கூறியது போல் கூறியதால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், விபத்தில் காயமுற்று பின் மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த நடராஜன் என்பவர் அன்றையதினம் மதியம் 12.24 மணிக்கு இறந்துவிட்டதாக தகவல் கிடைத்து சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து அ.சா.ஆ.7 ஆன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும், இறப்புத் தகவல் அ.சா.ஆ.6 என்றும், பின்பு இறந்த நபரின் பிரேதத்தின்மீது பிரேத விசாரணை மேற்கொண்டு அ.சா.ஆ.8 ஆன பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து, பிரேதத்தினை உடற்கூராய்வுக்கு அனுப்பி அ.சா.ஆ.11 ஆன உடற்கூராய்வு அறிக்கை பெற்றும், விபத்திற்குள்ளான வாகனங்களை ஆய்விற்கு அனுப்பி அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றும், மருத்துவர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தும், பின் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரியின் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.



S
RAMACHANDRAN

Digitally signed by
S
RAMACHANDRAN
Date: 2026.06.18
09:46:55 +0930

5-6 இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1. முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான விபரங்களை எடுத்துக் கூறி குவிமுச.பிரிவு 313(1) (ஆ) ன்கீழ் வினவிய போது, அவை பொய் என்றும், தன் தரப்பில் சாட்சிகள் உண்டு என்றும் கூறினார். ஆனால் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்று வழக்கு கோப்பில் மேற்குறிப்பு செய்யப்பட்டதின்பேரில் எதிரிதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. இருதரப்பு விசாரணைக்குப் பின்னர், விசாரணை நீதிமன்றம், எதிரி இதச. 279, 304(A) ஆகிய பிரிவுகளின்கீழ் குற்றவாளி என தீர்மானித்து, இதச.279 பிரிவின் கீழ் தனியாக தண்டனை வேண்டாம் என்று முடிவு செய்தும், இதச.பிரிவு 304(A)பிரிவின்கீழான குற்றத்திற்கு, 3 மாதம் மெய்காவல் சிறைத் தண்டனையும், அபராதம் ரூ.2000/- விதித்தும், அபராதம் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத் தண்டனையும் குவிமுச.பிரிவு 255(2)ன்கீழ் விதித்தும், எதிரி காவலில் இருந்த காலத்தை அவருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்திலிருந்து குவிமுச.பிரிவு 428 ன்கீழ் கழித்துக் கொள்ளவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதனால் மனக்குறைவுற்ற எதிரி இந்த குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார்.



S
RAMACHANDRAN
Digitally signed by
S
RAMACHANDRAN
Date: 2026.06.18
09:47:02 +0930

**06. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

| | |
|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் எதிரி இதச. 279, 304(A) ஆகிய சட்டப் பிரிவுகளின்கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்று தீர்வு கண்டுள்ளது சரியானதா? |
| 2 | விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பும், தண்டனையும் சட்டப்படியானதா அல்லது ரத்து செய்யக்கூடியதா? என்பதாகும். |

**07. பிரச்சனை எண். 1 க்கான தீர்வு :-**

7-1 இந்த குற்றவியல் மேல்முறையீடானது, கற்றறிந்த நீதித்துறை நடுவர் எண்.1, கோபிசெட்டிபாளைம் நீதிமன்றம் கடந்த 26.08.2025-ம் தேதியன்று பிறப்பித்த தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்றம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களான இதச. 279, , 304(A) பிரிவுகளின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. அதனை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7-2 அரசுதரப்பு வழக்கின்படி, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அ.சா.1. முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் 11 வரையிலான சான்றாவணங்களும்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:47:10 +0930

குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7-3 மேல்முறையீட்டாளர்/ எதிரிதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிக்கு எதிரான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 இன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து எதிரி அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் தனது இரு சக்கர வாகனத்தை இயக்கி தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த இறந்து போன நபரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று நிரூபிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் விபத்தை நேரில் பார்த்ததாக கூறி விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி அதிவேகமாகவும்,, அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தினை ஏற்படுத்தினார் என்று எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மாறாக தனக்கு முன்பாக நடராஜ் என்பவர் டிவிஎஸ் எக்ஸ்எல் வண்டியில் அவர் ரோட்டை கிராஸ் செய்யும் போது விபத்து நடந்தது, பிரவீன் என்பவர் அதே சாலையில் கோபி நோக்கி வந்தவர் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று மட்டுமே சாட்சியமளித்துள்ளார். ஆக அவரது சாட்சியத்தின்படி, எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கினார் என்று



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:47:26 +0930

இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 279 கூறுகளை நிரூபிக்கும் வகையில் அவரது சாட்சியம் இல்லை. அ.சா.2 முதல் 4 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை நேரில் பார்த்ததாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 முழு புலன் விசாரணையும் மேற்கொள்ளவில்லை. அவர் ஏற்கனவே சார்பு ஆய்வாளர் முதல் நிலை புலன் விசாரணை மேற்கொண்டு, பின்னிட்டு மேற்படி அடிபட்ட நபர் இறந்து போன தகவலின்பேரில் சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிய பின்னிட்டு இந்திய தண்டனைச் சட்டம் 304 (A)பிரிவின்கீழான குற்றச்சாட்டு சம்பந்தமாக தான் அ.சா.5 காவல் ஆய்வாளர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

7-4 விசாரணை நீதிமன்றம் எதிரியை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 மற்றும் 304(A) இன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து தீர்ப்பளிக்கும் போது, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டானது, மேற்படி எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பொதுமக்களின் உடைமைக்கும், உயிருக்கும் சேதம் ஏற்படுத்தும் வகையில் தனது வாகனத்தை இயக்கினார் அல்லது செயல்பட்டார் என்று நிரூபிக்க வேண்டும் என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல், அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:47:37 +0930

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் தனது வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்று சாட்சியம் அளிக்காத நிலையில், எதிரி முன்னால் சென்று கொண்டிருந்த நபரின் மீது தனது இரு சக்கர வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று மட்டுமே சாட்சியமளித்துள்ள நிலையில், அவரது சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு மேற்படியாரின் சாட்சியம் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை ஒப்பீடு செய்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து எதிரிக்கு தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளது ஏற்கத்தக்கது அல்ல என்று வாதிட்டார். எனவே மேல் முறையிட்ட அனுமதித்து அரசுதரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்து விசாரணை நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்து எதிரியை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார். மேலும் தனது வாதத்திற்கு ஆதரவாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Cr.l.R.C.No. 887 of 2010 Senthilkumar Versus The Station House Officer, Valavanur Police station Villupuram என்ற வழக்கில் 29/6/2017 தேதியிட்ட தீர்ப்பினையும் Crl.R.C.No. 424 of 2015 R.Sridharan Versus State by the Inspector of Police R.4 Pondy Bazar Traffic Investigation Wing, T.Nagar, Chennai



S
RAMACHANDRAN
Digitally signed by
S
RAMACHANDRAN
Date: 2026.06.18
09:47:44 +0930

and another என்ற வழக்கில் 15.06.2022-இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினையும் மேற்கோள்காட்டி வாதிட்டார்.

7-5 மேற்படி வாதத்தை எதிர்த்து அரசுதரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில், விசாரணை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட அ.சா.1-ன் சாட்சியத்தை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை, எதிரி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு அவரை குறுக்கு விசாரணை செய்யப்படாத நிலையில், மேற்படியாரின் சாட்சியம் விபத்தானது எதிரியின் அதிவேகத்தினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1-ன் சாட்சியத்தை ஊர்ஜிதப்படுத்தும் வகையில், புலன் விசாரணை அதிகாரியான அசா.5 ன் சாட்சியமும், மேற்படி புலன் விசாரணை அதிகாரி மூலமாக குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை வலு சேர்க்கும் விதத்தில் உள்ள நிலையில், விசாரணை நீதிமன்றம் உரிய முறையில் எதிரிக்கு எதிரான வழக்கினை ஆராய்ந்து அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கப் -பட்டுள்ளது என்று முடிவு செய்து எதிரிக்கு எதிராக தண்டனை, தீர்ப்பு



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:47:50 +0930

வழங்கியுள்ளது ஏற்கத்தக்கது என்றும், எனவே எதிரியால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்று வாதிட்டார் .

7-6 இந்த நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக நடைபெற்ற குற்றச்சாட்டு, விசாரிக்கப்பட்ட வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை ஆராய்கையில், குறிப்பாக எதிரி கடந்த 16.09.2020 ஆம் தேதி காலை 10.20 மணிக்கு கோபிசெட்டிபாளையம் புதுக்கரைப்புதூர் கனரா வங்கி முன்பாக உள்ள கோபி - அத்தாணி ரோட்டில் சாட்சி.1 சசிகுமாரின் உறவினர் நடராஜன் என்பவர் அவரது இரு சக்கர வாகனம் டிஎன் 36 கே6300 வண்டியில் வடக்கிலிருந்து தெற்காக வந்து ரோட்டின் மேற்கு புறமுள்ள கனரா வங்கிக்கு செல்வதற்காக சைகை காட்டியபடி வலது புறமாக திரும்பிய போது, மேற்படி ரோட்டில் அவருக்கு பின்னால் அதே திசையில் வந்த எதிரி தனது இருசக்கர வாகனமான டிஎன் 36 ஏ இ 4345 மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், மனித உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படும் விதமாக ஓட்டி வந்து மேற்படி நடராஜன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது பின்புறமாக



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:47:57 +0930

மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தினால் டிவிஎஸ் எக்ஸ்எல் சூப்பர் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற நடராஜர் கீழே விழுந்த நிலையில், அவருக்கு இடது பக்கம் நெற்றியிலும், வலது கழுத்திலும் பலத்த மொக்கை காயமும் இடது தோள்பட்டையில் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டு அருகில் இருந்தவர்கள் உதவியுடன் கோபி அரசு மருத்துவமனைக்கு முதலுதவிக்காக சேர்த்த நிலையில், அவரை மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சேர்த்த சிறிது நேரத்தில் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். எனவே மேற்படி நடராஜன் என்பவரது உயிரிழப்பு எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக் குறைவு தான் காரணம் என்று இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 மற்றும் 304 (A) இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

7-7 மேற்படி குற்றச்சாட்டை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலும் குறியீடு செய்துள்ளது. எதிரிதரப்பில் வாய்மொழி மற்றும் ஆவணச் சாட்சியங்கள் முன்னிறுத்தவில்லை.



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:04 +0930

**<u>இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 கீழ்க்கண்டவாறு கூறுகிறது:-</u>**

Section 279 :- Whoever drives any vehicle, or rides, on any public way in a manner so rash or negligent as to endanger human life, or t be likely cause hurt or injury to any other person, shall be punished with imprisonment of either description for a terms which may extent to six months or with fine which may extend to one thousand rupees, or with both.

எனவே இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 இன் கீழ் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், குற்றச்சாட்டுக்குண்டான நபர் ஒரு பொதுப் பாதையில் மனித உயிருக்கு அல்லது உடைமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் அந்த உயிருக்கு, உடைமைக்கு காயம், சேதாரம் ஏற்படும் வகையில் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இயக்குவது குற்றமாகும். ஆக இந்த வழக்கைப் பொறுத்தவரை விபத்தானது, கோபி - ஈரோடு நெடுஞ்சாலையில் பொது சாலையில் நடந்தது என்பது ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி விபத்தானது எதிரியின் அதிவேகத்தினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டதாக அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கும் வகையில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 16.09.2020 அன்று காலை 10 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு தான் வேலை செய்யும் HDFC வங்கிக்கு



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:11 +0930

இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது. புதுக்கரைப்புதூர் என்ற இடத்தில் உள்ள கனரா வங்கிக்கு அருகில் விபத்து நடந்தது என்றும், தனக்கு முன்பாக நடராஜன் என்பவர் டிவிஎஸ் எக்ஸ்எல் வண்டியில் அவர் ரோட்டை கிராஸ் செய்யும்போது விபத்து நடந்ததாகவும், பிரவீன் என்பவர் அதே சாலையில் கோபி நோக்கி வந்தவர் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று சாட்சியமளித்துள்ளார். ஆக விபத்தில் மரணமடைந்ததாக கூறும் நடராஜ் என்பவர் கோபி நோக்கி வந்து கொண்டிருந்ததாகவும், தனக்கு முன்பாக சென்ற நடராஜ் தனது இருசக்கர வாகனத்தில் ரோட்டை குறுக்காக கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக. சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது. சாதாரணமாக ஒரு நபர் ரோட்டை கடக்கும் பொழுது தனக்கு பின்னால் வாகனங்கள் வருகிறதா, இல்லையா என்று கவனித்து வாகனங்கள் வரவில்லை என்று இருந்தால் மட்டுமே ரோட்டை கடக்கலாம் அவ்வாறு வாகனங்கள் வந்தால் நின்று வாகனங்கள் சென்ற பின்னிட்டு ரோட்டை கடக்கலாம். வாகனம் வெகு தூரத்தில் வந்தால் தான் ரோட்டை குறுக்காக கடப்பது குறித்து கையால் சைகை செய்தோ அல்லது வாகனத்தின் விளக்குகள் மூலமாக சைகை காண்பித்தோ கடக்க வேண்டும். ஆனால் அ.சா.1ன் சாட்சியத்தின்படி, மேற்படி நடராஜன் ரோட்டை குறுக்காக கடக்கும் பொழுது சைகை



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:18 +0930

செய்தார் என்று எந்த சாட்சியமும் இல்லை. மேலும் எதிரி எந்த வகையில் விபத்தை ஏற்படுத்தினார் என்று அ.சா1.ன் சாட்சியத்திலிருந்து சங்கதிகள் உள்ளதா என்று நோக்கும் பொழுது, "பிரவீன் என்பவர் அதே சாலையில் கோபி நோக்கி வந்தவர் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார்" என்று சாட்சிமளித்துள்ளார். மேற்படி பிரவீன் தனது இருசக்கர வாகனத்தில் கவனக்குறைவாக வந்தாரா, அதிவேகத்துடன் வாகனத்தை இயக்கினாரா என்பது போன்ற எந்த ஒரு சாட்சியமும் இல்லை. விபத்தானது எதிரியின் கவனக்குறைவானால் ஏற்பட்டதா அல்லது இறந்து போன நடராஜன் சைகை செய்யாததால் விபத்து நடந்ததா என்பது குறித்து அ.சா.1ன் சாட்சியத்தில் இருந்து எந்த சங்கதியும் இல்லை. எனவே அ.சா.1ன் சாட்சியமானது, தனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த நடராஜன் ரோட்டை குறுக்காக கடந்து செல்லும் பொழுது அவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த பிரவீன் என்பவரின் இருசக்கர வாகனம் மேற்படி நடராஜன் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக மட்டுமே எடுத்துக் கொள்ள இயலும், யாருடைய கவனக்குறைவு மற்றும் அதிவேகத்தினால் விபத்து ஏற்பட்டது என்று இந்த நீதிமன்றத்தால் முடிவு செய்ய இயலாது.



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:26 +0930

7-8 விசாரணை நீதிமன்றம், அ.சா.1-ன் சாட்சியத்தை எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவரது முதல் விசாரணை சாட்சியத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டதாக முடிவுக்கு வந்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்ப்பளித்துள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை. குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தான குற்றச்சாட்டுகள் அனைத்தும் குற்றச்சாட்டை முன்வைக்கும் அரசுதரப்போ அல்லது புகார்தாரரோ எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் இந்த வழக்கைப் பொறுத்தவரை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 இல் கூறியுள்ள சங்கதிகளை அரசுதரப்பில் நிரூபித்தால் மட்டுமே மேற்படி குற்றச்சாட்டைப் பொறுத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள இயலும்.

7-9 மேலும் அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 விபத்தை நேரில் பார்த்த நபர் அல்ல. சம்பவத்தை கேள்விப்பட்டு விபத்து நடந்த இடத்திற்கு வந்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை தயார் செய்த சமயம் சாட்சியாக இருந்து கையெழுத்து



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:32 +0930

செய்த நபர் ஆகும். மேற்படி நபரின் சாட்சியம் சம்பவ இடத்தில் விபத்து நடந்தது என்று எடுத்துக் கொள்ளலாமே தவிர, எதிரியின் கவனக்குறைவினால் விபத்து நடந்ததாக அவரது சாட்சியம் இல்லை. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 2020 ஆம் ஆண்டு ஒரு நாள் காலை 10:45 மணி அளவில் தான் அந்தியூர் மெயின் ரோட்டில் டீ போட்டுவிட்டு வெளியே வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்ததாகவும் ஆம்புலன்ஸில் யாரையோ எடுத்துச் சென்றார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். எனவே மேற்படி நபர் விபத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பாக புதுக்கரைப்புதூரில் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது காவல் நிலையத்திலிருந்து சிசிடிவியை பார்க்க வந்து தன்னை போலீசார் விசாரித்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். ஆக விபத்து நடந்த இடத்தில் அ.சா.4 வேலை செய்து கொண்டு இருந்த கம்பெனியில் சிசிடிவி கேமரா பதிவுகளை போலீசார் பார்வையுற்றதாக கூறும் நிலையில், மேற்படி சிசிடிவி பதிவுகளை அரசுதரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. அ.சா.5 புலன்விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில், 16.09.2020 தேதியில் சசிகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை தலைமை காவலர் பெற்று நிலைய குற்ற எண் 924 / 2020 சட்டப்பிரிவுகள்



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:39 +0930

279 மற்றும் 337 இதச.பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும், பின்பு மேற்படி வழக்கின் புலன் விசாரணையை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு முருகேசன் என்பவர் எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 12:30 மணி அளவில் சாட்சிகள் சேகர் பாலசுப்பிரமணியம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் சசிகுமார், லோகநாதன், பிரகாஷ், சேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து பதிவு செய்துள்ளார். சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். பின்னிட்டு மேற்படி வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு முதல் கட்ட விசாரணை மேற்கொண்டதாகவும், வழக்கில் காயமடைந்து மேல் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நடராஜன் 12.24 மணிக்கு இறந்து விட்டதாக தகவல் கிடைத்ததன் பேரில் சட்டப்பிரிவை மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும், பின்னிட்டு இறந்து போன நபரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயாரித்ததாகவும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகள் பெற்றதாகவும், இறந்து போன நபரின்



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:45 +0930

உடலை பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவரை விசாரித்து உடற்கூராய்வு அறிக்கை பெற்றதாகவும், பின்னிட்டு எதிரிக்கு எதிரான குற்றம் உண்மை என முடிவு செய்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் படி, எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை ஊர்ஜிதப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால் மேற்படி புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது, மேலோட்டமாக இருப்பதாகவே இந்த நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

7.10 மேல்முறையீட்டாளர்/ எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், குறிப்பாக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 279 இன் கீழ் ஒரு நபரை குற்றவாளி என தீர்மானிப்பதற்கு முன்பாக அவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பொது பாதையில் வாகனத்தை இயக்கினார் என்று நிரூபிக்க வேண்டும் என்று வாதிட்டு, தனது வாதத்திற்கு ஆதரவாக முன்னிலைப்படுத்திய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இரண்டு தீர்ப்புகளை ஆராய்கையில்,



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:48:53 +0930

மேற்படி தீர்ப்புகளில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தெளிவாக,

" there should be a rash and negligent driving by the accused in the public road என்றும் குறிப்பாக Crl.R.C.No. 424 of 2015 R.Sridharan Versus State by the Inspector of Police R.4 Pondy Bazar Traffic Investigation Wing, T.Nagar, Chennai and another என்ற வழக்கில் 15.06.2022-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் " This court on perusing the order of the trial court as well ass the appellate court, finds that both the courts had not considered the fact that prosecution witnesses has not spoken about the rash or negligence on the part of the accused. They have only said that the bus was driven very fast by the accused. Driving a vehicle in a high speed per se is not an inference for rash or negligent driving. There must be evidence to show by driving the vehicle at high speed it likely to endanger the human life. In this case, none of the witness had deposed that the vehicle was driven in a manner endangering the human life or rashly."

இந்த வழக்கிலும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட குறிப்பாக அ.சா.1 எதிரி எப்படி பொதுமக்களின் உடலுக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படுத்தும் விதத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் தனது இருசக்கர வாகனத்தை ஓட்டினார் என்று குறிப்பாக சாட்சியமளிக்கவில்லை. எதிரி



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:49:00 +0930

தரப்பில் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்றாலும் கூட, மேற்படி சாட்சியின் முதல் விசாரணை சாட்சியத்தில் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279 ன் கூறுகளை நிரூபிக்கக்கூடிய வகையில் சாட்சியம் இல்லை என்பதால், விபத்தானது எதிரியின் அதிவேகமாகத்தினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டது என்று அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரியின் அதிவேகத்தினாலும்,, அஜாக்கிரதையினாலும், விபத்து ஏற்படவில்லை என்றிருக்கும் நிலையில், எதிரிக்கு எதிரான இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 304 A இன் கீழான குற்றச்சாட்டும் நிரூபிக்கவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**08. பிரச்சனை 2 கான தீர்வு:-**

ஏற்கனவே பிரச்சனை எண்.1 ஐப் பொறுத்து இந்த நீதிமன்றம் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304 (A) வின் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்று தீர்மானித்துள்ள நிலையில்; விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஆராய்கையில், விசாரணை



S RAMACHANDRAN
Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:49:07 +0930

நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் அ.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளை அப்படியே ஏற்றுக் கொண்டு மேற்படி சாட்சியை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவரது சாட்சியம் முழுமையாக ஏற்று எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்று முடிவு செய்து தீர்ப்பளித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. ஒரு சாட்சியின் சாட்சியத்தை முழுமையாக ஏற்க வேண்டும் என்றால், அந்த சாட்சியம் சட்டத்திற்கு உட்பட்டு சட்டத்தின் கூறுகளை நிரூபிக்கக்கூடிய வகையில் அவரது சாட்சியம் இருக்க வேண்டும். குறிப்பாக இந்திய தண்டனை சட்டம் 279 பிரிவின் கீழான குற்றச்சாட்டை நிரூபிக்கக்கூடிய வகையில் சாட்சியம் இல்லை என்று இருக்கும் நிலையில், அவரது சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. எனவே விசாரணை நீதிமன்றம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 279 மற்றும் 304(A) பிரிவுகளின்கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் நீக்கரவு செய்யத்தக்கது என்றும், இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால் இந்த



S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:49:14 +0930

மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் இந்த பிரச்சினை குறித்து தீர்மானிக்கின்றது.

09. முடிவில், இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. விசாரணை நீதிமன்ற ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 40/2021, நாள் 26.08.2025 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தண்டனை ரத்து செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எனவே, எதிரியின் மீது சுமத்தப்பட்ட இதச. 279, மற்றும் 304(A) ஆகிய பிரிவுகளின்கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி மேற்படி பிரிவுகளின்கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து குவிமுச.பிரிவு 386 ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அச்சிடப்பட்டு, மீண்டும் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பபட்டு, 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 18-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:49:22 +0930

மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிபதி,
கோபிசெட்டிபாளையம்.

<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் -</u>

இருதரப்பிலும் இல்லை.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2026.06.18 09:49:29 +0930

மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிபதி,

கோபிசெட்டிபாளையம்.

<u>நகல்</u>

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1

கோபிசெட்டிபாளையம்..

**அசல்/வரைவு தீர்ப்புரை**

**குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.222/2025.**

**நாள் - 18.06.2026**

**மூன்றாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்.**

---------------